1607

உ

துறையூர் பெருமாள்மலை

ஸ்ரீபிரசன்ன வெங்கடாஜலபதி,

பக்திரஸக் கீர்த்தனங்களும்

உற்சவக்காக்ஷி

வழிநடை அலங்காரச் சிந்தும்

REGISTRAR ... 17 JUN 1930

துறையூர் ஜமீன்தார் கல்விச்சாலை உதவியாசிரியன்

S. பூரணம்பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்றது.

துறையூர்

நித்தியானந்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1930

Copy Right.] [விலை அணா 3.

ஸ்ரீ

துறையூர் பெருமாள்மலை

ஸ்ரீபிரசன்ன வெங்கடாஜலபதி

பக்திரஸக் கீர்த்தனைகள்.

விநாயகர் காப்பு.

வெண்பா.

சீர்வளரும் நம்பெருமாள் குன்றிற் சிறந்தொளிரும்
ஏர்வளரும் பெருமாற் கிசைபாடப்—போர்வளரும்
ஒற்றைக்கொம் பாம்பல்முகன் உம்பர்புகழ் எம்பெருமான்
கற்றைக் கதிர்சரணே காப்பு.

---

1. விநாயகர் துதி.

பல்லவி.

ஓம் ஓம் கரிமுகவனே உனையுன்னினேன் (ஓம்)

அநுபல்லவி.

தேவா தினமெனக்கு மூவாக் கருணைபுரி (ஓ)

சரணங்கள்.

1 துறைசைக் கிரியமரும் அரசை வணங்குதற்கு
தோன்றுத் துணையெனக்குத் தோன்ற வருளெனக்குச்
சுற்றிவந்தேன் நற்றிருத்தாள் பற்றுடனே சற்றருள்வாய் (ஓ)

2 வேலனுக் குயர்வள்ளியை சீலமுடன் சேர்த்திட்ட
மூலாதாரப் பொருளே காலத்தினி தருளே
வேளைவந்து ஏழைநொந்து மோழையென்று பாழ்படாமல் (ஓ)

3 எங்கும்புகழ் காவிரி தங்கும்படி யருளும்
துங்கக் கரிமுகனே சங்கைதவிர் கோமானே
எத்திசையும் நத்திவளர் முத்தமிழிற் பூரணன்சொல் (ஓ)

---

2. ஆஞ்சநேயர் துதி.

பஞ்சாமிர்தம் தேனொழுகும் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

தஞ்சம் தஞ்சம் ஆஞ்ச நேயா
தய வுனக் கின்னு மில்லையா (தஞ்ச)

அனுபல்லவி.

கொஞ்சமுந் தாமதியேன் சஞ்சலந்தீ ரய்யனே
அஞ்ச வித்தேனே பஞ்சை யானேனே
நெஞ்சி லினித்தானே வஞ்ச மில்லேனே (தஞ்)

சரணங்கள்

1 காவலனிலங் கைதனைக் கண்டுநெருப் பாலொழித்தாய்
பாவியெனும் ராவணனைப் பாழாய்ப் படவழித்தாய்
ஆவி யரக்கரைப் போகத் தொலைத்தவா
அன்னை ஜானகியை எண்ணித் துதித்தவா (தஞ்)

2 ஆழிநடு வணைகட்டியே ஐயன்கலி தீர்த்தவனே
ஊழியனாய் ராமனுக்கு உழைத்துவந்த உத்தமனே
ஆழ்கடல் தாண்டியே அன்னையைத் தேடினாய்
ஆழியை ஈந்திட் டழியா வரம்பெற்றாய் (தஞ்)

3 போரான ராவணன்முன் நேரா யமர்ந்தவனே
வேறு யரக்கர்குலம் வேரறுத்த உத்தமனே
பாரில் புகழ்பெறும் கூர்விழி ராமர்க்கு
கோரப் பெரும்போரில் மார்தட்டி நின்றவா (தஞ்)

4 தீர்த்தபுரி யாந்துறைசை திருமலை மீதமர்ந்த
மூர்த்தியாம் வேங்கடவன் கீர்த்திதனை யான்புகழ
திருமறை புகழ் பெரு மறையவா
சிரபுச ணிந்திகழ் கிருபை செய்குவாய் (தஞ்)

3. இலந்தையடிக் கறுப்பண்ணர் துதி.

செந்தமிழுலகினில் என்றமெட்டு.

கண்ணிகள்.

1 எண்டிசை கீர்த்திபெற்ற இலந்தடிக் கறுப்பண்ணு
அண்டினே னாதரிப்பாய் —அடியே னாவேன்
கொண்டெனே யாட்கொள்ளுவாய் —இந்த

இழிந்த கூட்டை யேசத மென்று
பழியதில் நின்று வழியிலே யென்று

ஏழையைக் காத்தி டய்யனே—ஊழ்வினே போக்கி
என்று மருள்வாய் மெய்யனே. (எ)

2 உண்டி யுடுக்கையையும் பெண்டு பிள்ளைகளேயும்
கண்டுமெய் மறந்தேனையா —உனேயே நாடும்
தொண்டினேத் துறந்தேனையா —இந்த

உலக வாழ்வினே நலமென நண்ணி
நிலேயென வெண்ணி குலவுறு முன்னே

உன்னருள் தந்தி டய்யனே—அடிமையாக
உன்னேத் துதித்தேன் மெய்யனே. (எ)

3 வேங்கட வாசவனுக் கோங்கு மிடமளித்து
நீங்காமல் தங்கினையையா —அடியேனுக்கு
வீங்கருள் செய்குவாய் மெய்யா —நாளும்

வேளே முழங்கும் தாள முழக்கம்
மேக நடுக்க மாக வடக்கும்

வேலா கறுப்பண்ண சுவாமி—எளியவனே
வேதனே யின்றிக் காப்பாய் நீ. (எ)

4 இலந்தை மரத்தடியில் நிரந்தரமா யமர்ந்த
எங்கள்கருப் பண்ணனே நா —ளும் வந்து
இன்புடன் போற்றினேன் மெய்யனே —தூய

என்றும் நீறே நன்றருள் செய்வாய்
எளியேன் பூரணன் இன்சொல் பொய்யா

திரங்கி யெனையாள் ஐயனே —நிதமும் வந்தென்
கரங் குவித்திட்டேன் துய்யனே. (எ)

---

4. கடற்றுயின்றான் துதி.

மீனாக்ஷி ரமண என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஆலிலைப் பள்ளி கொண்ட ஐயா ஸ்ரீராம (ஆலிலை)

கண்ணிகள்.

1 அன்னை ஜானகியை நண்ணிய தேவா—இந்த
அழகுற் றிடுதிரு துறைசைக் கிரியதின்
அடிவா ரத்தினில் அமர்ந்திட்ட ராமனே (ஆலிலை)

2 எம் பெருமாளே எழிலுறு மருளே—நாளும்
எண்டிசை போற்றிட தொண்ட ருகந்திட
எம் பெருமானே இனிதருள் கோனே (ஆலிலை)

3 அரக்கர் குலந்தனை பறக்கடித் தோனே—இந்த
அவனியில் யான்படுந் துயர்தனைப் போக்கிட
அண்டினே னுந்தனை தொண்டனைக் காத்திடும் (ஆலிலை)

4 ஆதிமூல மென்ற ஆனையைக் காத்தவா—தூய
ஐயனே சதுர்புஜக் கையனே மெய்யனே
துய்யனே பூரணம் தோத்தரித் தேனே (ஆலிலை)

---

5. பிரசன்ன வேங்கடாஜலபதி தோத்திரப்பாக்கள்.

"உடுமலை முத்துசாமிப்பாட்டை" என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1 துறைசைப் பெருமாள்மலைவாழ் சீலா—உனை
தோத்தரித்தேன் தொண்டர்க்கனு கூலா—நல்ல
தோகையலர் மேல்மங்கையின் ஆவிக்கிசைந்த மண
வாளா ஆதி மூலா (து)

2 திருப்பதி மாமலையை விட்டு—நின்
தேவியுடன் வந்தாய் புறப் பட்டு—இங்கு
தீரா வினையகற்ற நேராய்ப் பிரசன்னமு
மிட்டு வந்தாய் நெட்டு (து)

3 பக்தர்கள்தம் பாவந் தீர்க்கும் பாதா—ஏழை
பாடி நின்றேன் நின்னருளைத் தாதா—அன்று
பாலன்ப்ரக லாதனுக்கா கோலநர சிங்கமதாய்
வந்தாய் அருள் தந்தாய் (து)

4 துய்யா சதுர்ப்புஜ சிங் காரா—மார்பில்
துலங்கும் துளபமாலை வீரா—இன்று
துறைசைக் குணதிசையில் துலங்கு மலையமர்ந்த
தீரா வெகு சூரா (து)

5 எங்கும் புகழ் பெற்ற பிர சன்னா—ஏழை
இயம்பும் மொழிக் கிரங்கும் கண்ணா—நின்
இருபத மலரிணைப் பெறுமருள் தருகுவாய்
முன்னா மணி வண்ணா (து)

6 அலர்மேல் மங்கைமகிழ் ஐயா—பாடும்
அன்பன் பூரணம் களிக்கு மெய்யா—ஞானம்
அன்றுதித்த மைந்தனுக்கு நன்றருளைச் செய்துகந்த
துய்யா கரி மெய்யா (து)

---

6. வேறு

அம்பிகா உன் மகன் குகன் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வேங்கட மா மலைவாசா
சங்கடந் தீர்த்தருள் நேசா (வே)

கண்ணிகள்.

1 ஆழிநடுத் துரும்பதுபோல் அகப்பட்டேன் மாய்கைதனில்
ஊழியனு யுனைத்துதிக்க உருவே பொருளே யருளேதருவாய் ()

2 பாலன் பிரகலாதன் பாடி உனைத் துதித்ததினால்
சீலமுடன் தூணில் வந்த சிம்மவடிவே எம்மைக்காப்பாய் (வே)

3 காலை முதலை யிழுக்க கரியுனை வேண்டிநிற்கவ்
வேளை வந்தாதரித்த வேங்கடேசா வேணுநாதா (வே)

4 மங்கையர்கள் மாய்கைதனில் மானம்விட்டு ஞானம்கெட்டேன்
தங்கும்வேங்க டேசாயெமை தருணம் பார்த்து கருணைபுரியும் ()

5 பண்பாய்ப் பெருமாள்மலை தங்கிநிற்கும் வேங்கடவா
பண்பாகப் பூரணனும் பாடி நின்றேன் சேவடிதா (வே)

---

7. வேறு.

காலங்கலிகால மாச்சுதே என்ற வர்ணமெட்டு.

1 பிரசன்ன வேங்கட வாசா—பெருமாளீசா
பேதையைக் காத்திடும் நேசா
சங்குச் சக்ரக்கையனே தாடகை சம்ஹாரனே
எங்கும் விளங்குங்கோனே எழில்பெற்றிடும் பூமானே (பிர)

2 அலர்மேல் மங்கை நேயனே—அடியேன்நானே
அல்லல் அடைந்தேன் மாயனே
தொண்டர் பஜனை ஒலி தோன்றிய ஞானஒளி
கண்டோர்க்குக் கடைக்கண்விழி கருணைபுரிந் தாளும்ஒளி (பிர)

3 எண்டிசை யோர்கள் மும்முடி—எம்பெருமானே
கொண்டு வருவார் பூவடி

வாடாத வரந்தருவாய் வந்தெனக் கருள்புரிவாய்
நாடாளும் பெருமாள்மலை நாயகனே பூமிபுகழ் (பிர)

4 கறுப்பண்ணர் மகிழும் நேசனே—காகுத்தனே
கருணைபுரி திருமலை வாசனே
பாரத நாடதனில் பாலன் பூரணதாஸன்
சீராகவே துதித்தேன் சிந்தை மகிழ்ந்தென்னைக் காப்பாய் (பிர)

---

8. வேறு.

நடந்ததென்ன சொல்லம்மா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பெருமாள் மலை வாச ஸ்ரீ
பிரசன்ன வெங்கடேசா (பெருமாள்)

அநுபல்லவி.

திருப்பதி வாழ்நேசா தேடினேனீசா
தேவர்க்கமுதளித்த கோகுல விஸ்வாசா
தாஸர்க்குகந்திட்டு தயைபுரி வாசா
தஞ்ச மடைந்தோர்கள் தமைகாக்குமீசா (பெரு)

சரணங்கள்.

1 காமத்தினல் பெண்கள் மோகத்தில் பட்டேன்
கருத்தழிந்தே யான் கண்ணியர் வலைப்பட்டேன்
சிந்தை தயங்கிடும் சிறியனும் வயதில்
சின்னஞ் சிறுவனை நண்ணியே ஆதரி (பெரு)

2 பொய் சூது வஞ்சனை பொறுமையை நீக்கி
பெல்லாத நாசருடன் செல்நேசம் போக்கி
தம்மையே யண்டிடும் தாஸர்க்கடிமை யாக்கி
தரணியில் தமியேனை யாதரி கண்ணோக்கி (பெரு)

3 சந்தையின் கூட்டமாம் சம்சார வாழ்க்கை
சத்தில்லாக்கூட்டை சதமெனும் நோக்கை
சித்தத்தில் நினையாமல் சிறியேனைக் காப்பாய்
சேயன் பூரணதாஸன் சேவித்தேனுந்தனை (பெரு)

ஸ்ரீராமஜெயம்.

தீர்த்தபுரி என்னும் துறைசைமாநகர் பெருமாள்மலை இரதோற்சவக் காக்ஷியைக் காணச்சென்ற

தம்பதிகளின் நடையலங்காரம்.

வெண்பா.

சீர்பெருமாள் மலையின் திருவிழாக் காக்ஷிதனை
ஏர்பெருகும் பாரில் இயம்புதற்கு—ஈராறு
கையன் அறுமுகனும் கந்தனுக்கு முன்பிறந்த
துய்யன் விநாயகன் றாள்துணை.

விருத்தம்.

செங்கமலக் கொங்கலர்கள் திங்களென வளர்பொய்கை செறிந்து நாளும்
பங்கமறப் பாகவதர் பணிந்துபுறஞ் சூழ்ந்தமதி பண்ப ரங்கத்
துங்கமுறு நகரதனுட் டம்பதியோ டினிதேகித் துறைசை சேர்ந்த
இங்கித நலலங்கார நடையதனை எடுத்துரைப்பே னின்பாய்க் கேண்மோ.

ஆனந்தக்களிப்பு

பெருமாள் மலைபார்க்கப் பெண்ணே—நீயும்
பிரியமாய் என்னுடன் நடந்துவா பின்னே.

1 அகிலமெல் லாந்தங்கி வாழும் நல்ல
அண்டத்தி லுள்ளோர் புகழ்பெற நாளும்
இங்கிதமாய் துதி செய்யும் அந்த
இறையவன் தெரிசனம் நற்பல னாகும் (பெரு)

2 சுந்தரமான என் மாதே மலர்
சூடிப்புறப்படு சுகமாயிப் போதே
பெருமாள் மலைவிழா மாதே அதை
பிரியமாய் பார்க்கப் புறப்படி ப்போதே (பெரு)

3 திருச்சி மலைக்கோட்டை வந்தோம் நல்ல
திருத்தாயு மானவர் சந்நிதி கடந்தோம்
மார்க்கத்தில் குளமதைக் கடந்தோம் அங்கு
மலைபோன்ற கிறிஸ்தவர் ஆலயம் கண்டோம் (பெரு)

4 தெப்பக்குளம் போஸ்டைப் பாரு முன்னே
தெருவினில் நிற்பது துறையூர் மோட்டாரு
தப்பாமல் விலாஸத்தைப் பாரு பின்
தயங்காமல் வண்டியில் ஜல்தியில் ஏறு (பெரு)

5 ஷண்முகம் மோட்டாரைக் கண்டோம் நாம்
சரியாக இருபேரும் சந்தோஷங் கொண்டோம்
விந்தையாய் ரூபாயை விண்டோம் இனி
விரைவினில் ஏறியே முன்சீட்டைக் கொண்டோம் (பெரு)

6 தங்கிய மோட்டாரின் வேலை நல்ல
தந்திர ஆங்கிலக் காரரின் வேலை
இந்தியர் பணத்திற்கு ஓலை எமன்
இடுகின்ற சீட்டோலை ஆகுமிவ் வாலை (பெரு)

7 ஆவியாம் அசுவத்தைப் பூட்டி பொல்லா
அனலென்ற கடிவாளம் அதன்வாயில் மாட்டி
பெட்ரோல் எண்ணெய்மிக மூட்டி அதை
பிசகாமல் ஓட்டுவார் நீ பார் சீமாட்டி (பெரு)

8 ஆயிரக் கணக்கான பணத்தை வாரி
அள்ளிக் கொடுத்துமே வாங்குவார் பிணத்தை
ஆவிபோ னால்மிக சொத்தை சிறு
அரிவாள் பிடிக்கும் ஆகாது கத்தை (பெரு)

9 ஹாரன் அடித்திட்டார் பாரு இனி
அரைக்ஷணம் நிற்காது நம்மோட்டார் காரு
துரிதமாய்ப் போவதைப் பாரு மேலே
தூக்கித்தூக்கி எறியும் ரோட்டுகள் சீரு (பெரு)

10 சின்னையாச் சத்திரம் பாராய் மேலே
சேவகன் குதிரைமே லமர்ந்திட்டான் ஜோராய்
பத்திர மாகஉட் காராய் மிக
பலமாக ஓடுது நம்காரு பாராய் (பெரு)

11 காவேரி பாலத்தின் மேன்மை மிக
கருதியே பார்த்திடு அதன்பெரு சீர்மை
ஆங்கிலர் முடித்திட்ட கூர்மை அவர்
அன்னைமார் செய்திட்ட அரும்புண்ய சீர்மை (பெரு)

12 அன்னமே பெண்ணேநீ பாரு மிக
அருமையாய்த் தெரிகின்ற ஆலயச் சீரு
அழகாகக் குடதிசை சேரு ஸ்ரீ
அரங்கத்தைப் பார்த்துந்தன் அகங்களி கூரு. (பெரு)

13 விபீஷணர் செய்திட்ட விந்தை அதை
விளம்புவேன் கேட்டுந்தன் களிகூரு சிந்தை
விநாயகர் வைத்திட்டார் முந்தை நாளில்
விண்ணவர் மண்ணவர் போற்றுமத் தந்தை. (பெரு)

14 ஏழு மதில்களின் சீரு அதை
இயற்றிய சோழரின் எழிலைநீ கூறு
வாழ்கின்ற ஸ்ரீரங்கன் பேரு அவரை
வாழ்த்தியே துதித்தவர் ஆழ்வார்கள் பாரு. (பெரு)

15 கருதித் துதியடி பெண்ணே! அவர்
கருணை பெறவேநாம் காணுவோம் பின்னே
திருவேங்க டேசனை முன்னே போற்றித்
திரும்புவோம் ஸ்ரீரங்கன் திருவடிக் கண்ணே. (பெரு)

16 திருவானைக் காவலைப் பாரு அங்கு
திருமதில் மத்தியில் சிவலிங்கச் சீரு
திரும்பியே ஜெபித்திடு நேரு அவர்
திருவடி மனத்தெண்ணி நீ களி கூரு (பெரு)

17 கொள்ளிடந் தாண்டியே வந்தோம் வழியில்
கொச்சியைப் போன்றதோர் நொச்சியங் கடந்தோம்
தெங்கொடு நெல்வயல் பார்த்தோம் இங்கே
தெரிகின்ற மண்ணச்ச நல்லூரைக் கண்டோம் (பெரு)

18 வளமான காபிஹோட்டல் பாரு அதில்
வழிப்போக்கர் இறங்கியே வாங்கியுண் பாரு
நிமிஷங்கள் பத்துமே காரு இங்கே
நிற்பது என்னடி நீபதில் கூறு (பெரு)

19 கொடுத்திட்டார் ஹாரனின் கூரு நல்ல
குணமான டிரைவரின் நேர்மையைப் பாரு
சூக்ஷம மோட்டாரைப் பாரு அதன்
சூழ்ச்சியை என்சொல்வேன் தோகையே கூறு (பெரு)

20 அண்டம் புவி குலுங்கத் தானே ஓடும்
அதிசயம் பார்த்துன் னகமகிழ் மானே
கண்டு மயங்காதே தேனே மெத்த
கடுசாக இன்ஜினை ஓட்டுரார் மானே. (பெரு)

21 கண்டோம் திருவளர் சோலை நாமும்
கைகுவித் தோம்பெண்ணே இவ்விளங் காலை
ஆதியாம் திருவளரை வேலை முன்
அமைத்திட்ட சிற்பியின் சாமர்த்திய வேலை. [பெரு)

22 பிரமங்கலம் ரோட்டுப் பாரு அதில்
பின்வந்த மோட்டாரும் தங்கின நேரு
என்ஜினுக்குத் தண்ணீர் கூரு இட்டு
எடுத்திட்டார் மோட்டாரைப் பார்த்துக் களிகூரு (பெரு)

23 புகைபோல ஓடுது பாரு திரு
புலிவலம் வந்துதே க்ஷணத்தினில் காரு
பாங்கியே டோல்கேட்டு பாரு
பிரிகின்ற பாட்டையாம் முசிரியின் கூரு (பெரு)

திருநாடு ஆவண

24 தோன்றுதே துறைசைமா நகரம் சற்று
தூரத்தில் தெரிவது தான்மலை சிகரம்
துணையாகும் பசுமலை உயரம் மிக
தூரமே தோன்றலே கொல்லியின் சிகரம் (பெரு)

25 பாரடி துறைசையாம் பெண்ணே அதன்
பண்பினை என்சொல்வேன் என்னருங் கண்ணே
தேரடி நீமனம் பெண்ணே இனி
தெம்பு விடாமலே நம்பிவாக் கண்ணே. (பெரு)

26 பாரடி முனிசீபுக் கோர்ட்டு அடுத்து
பங்களா என்பதின் கட்டிடக் கேட்டு
நீதியாம் மேஜீஸ்திரேட் கோர்ட்டு பக்கம்
நிறையாக பதிவுசெய் சப்ரிஜீஸ்டார் கோர்ட்டு (பெரு)

27 டிக்கெட்டை கொடுத்திடு கண்ணே மோட்டார்
இக்கட்டு நீங்கவே இறங்குவாய்க் கண்ணே
கால் நடையாகவே பெண்ணே கடை
காக்ஷிகளைப் பார்க்க கடுகிவா பின்னே (செரு)

28 சாலைத்தெரு இது தாண்டி T. K.
சாப்பாட்டு ஹோட்டலின் நேர்மை சொல்வேண்டி
பார்த்திடு பாலக்கரைத் தாண்டி அங்கே
பண்பாய் தெரிவது அரண்மனை தாண்டி (பெரு)

29 நல்லபெரு மாள்கோவில் பாரு எந்தன்
நங்கையே சீக்கிரம் நாதனடி சேரு
வேணுகோபால் ஜோதிப் பாரு அங்கு
விளங்குங் கோபுர புறமதில் சீரு. (பெரு)

30 ஜெமீந்தா ரவர்கள்வாழ் வீடு இந்த
ஜெகத்தினி லதற்கிணை வேறில்லை யீடு
காருண்ய வள்ளல்கண் கூடு அருங்
கவிவாணர் புகழ்ந்திடும் சிபிக்கிவர் யீடு (பெரு)

31 தருமத்தில் சிறந்தகல்விச் சாலை இவர்
தகுதியுடன் தந்துள்ளார் மாளிகை முன்னாலே
வேங்கட வாச னருளாலே அவர்
விரிவாக வாழ்கவென விளம்பு புவிமேலே

32 பெரியமட ஆதீனம் பாரு சிவ
பிரகாச சுவாமிகளின் சரியான சீரு
குருவான சுவாமிகளின் பேரு நாம்
குரித்தாலே மோக்ஷமென மரிந்தாலுங் கூறு (பெரு)

33 கண்டெடுத்த வேணுநாத னடியே நாம்
கண்டு வணங்கிேனும் திரும்புவா யடியே
பார்த்திடு ஆயிரங்கண் மாரி இது
பாரோர் வணங்கிடும் கோவிலாம் கோரி (பெரு)

34 தேர்ந்திடும் சிவன்கோவில் பாரு அங்கு
திறமாய் விளங்கிடு மாலயச் சீரு
வந்திடு மண்டம் நேரு உள்ளே
வாழ்ந்திடும் பெருமானின் நற்பெரும் சீரு (பெரு)

35 சுத்தமான தெப்பக்குளம் பாரு அந்த
சுந்தர மானதோர் வாவிவளஞ் சீரு
மத்தியில் மண்டபம் பாரு நிறை
மாடவேலை பார்த்துந்தன் மனங்களி கூரு (பெரு)

36 காசிலிங்கம் கோவில்பார்க்க வாராய் மனதில்
கருதினல் பாவம் பறக்குமே பாராய்
சீர்மிகு வாவிவளம் நேராய் அங்கு
சிறப்புடன் படித்துறை நேர்மிகு பாராய் (பெரு)

37 வருடமொரு முறை மேடம் மதியில்
வளரும் பகலவன் வந்துபணிந்திடும் திடமும்
பக்தர் பணிந்திடும் வேடம் அதை
பார்த்தாலே சார்வோம் தூய்மையாம் கூடம் (பெரு)

38 அரண்மனைச் சத்திர வீதி இங்கு
அடுக்காக வக்கீல்கள் வாழ்கின்ற நீதி
வீதி கடந்தோமே பாதி முன்னே
விரிவாய் தெரிவது கடைகளாம் வீதி (பெரு)

39 செட்டிமார் நெட்டுக்கடை ரோட்டு முன்னே
சேர விளங்குவது செம்போலீஸ் கோர்ட்டு
பார்த்திடு மளிகைகள், கேட்டு மிக
பலசாமான் விற்றிடும் ஷாப்புகள் நீட்டு (பெரு)

40 நித்தியானந் தச்சுக்கூடம் பாரு அங்கு
நிறைவான அச்சுவேலை சரியான சீரு
பதிப்பாளர் பார்த்திடும் நேரு அங்கு
பைண்டிங்கும் ரூலிங்கும் பலவேலை ஜோரு (பெரு)

41 பார்த்திடு ஜவுளிக்கடைக் கூட்டம் இங்கு
பண்பான நெசவுகளின் தென்பான நீட்டம்
அடுக்கான கட்டிடங்கள் ஓட்டம் கையில்
அரைக்காசு மில்லாவிடி லதில்மன வாட்டம் (பெரு)

42 வாடி மயங்கிட வேண்டாம் மணி
வளர்மதி தோன்றிடு மாறுமே கண்டோம்
சீலமாய் சிற்றுண்டி யுண்டோம் இங்கே
சரியான ஜட்காவை வாடகைக்கு கொண்டோம் (பெரு)

43 ஏறடி வண்டியில் பெண்ணே இன்று
இறைவன் குதிரைசேவை தரிசிக்கக் கண்ணே
பாரடி ஜனக்கூட்டம் பின்னே மிக
பகுதிப்பகுதியாக வருவதைப் பார் பெண்ணே (பெரு)

44 துரௌபதை யம்மனிட பாதம் நாம்
துதித்திட பாவம் தொலைக்கலாம் நீதம்
அக்னியில் மூழ்கிவரும் விநோதம் பார்க்க
அவனியோர் வருவது பெரும்புகழ் விநோதம், (பெரு)

45 வந்தோம் அடிவாரம் பாரு மிக
வரிசையாய் வைத்திட்ட கடைகளின் சீரு
வாத்திய முழக்கங்கள் பாரு அங்கே
வரிசையாய்ப் போலீஸார் வருதைப் பாரு (பெரு)

46 பிரமோ தூதவெனு மாண்டு நல்ல
பெரும் வைகாசிதேதி இருபத்து ஆறு
நாளிது வேங்கடன் ஈண்டு நாதன்
நாடிக் குதிரைமே லேறிட்டான் வேண்டு (பெரு)

47 பள்ளிகொண் டார்சேவை பாரு மற்றும்
பக்தர் தெரிசனம் பண்பாகக் கூறு
ஆலவட்டம் கவுரியைப் பாரு மிக
அசைந்தாடு மசுவத்தின் திறமான ஜோரு (பெரு)

48 வேட்டு மத்தாப்புகள் நீட்டு பல
விதவித மான நிறங்களின் கூட்டு
வாட்டுது புகைமிக ஓட்டு பல
வர்ணம் பலவற்ருல் மனமகிழ் மூட்டு (பெரு)

49 பக்தரின் பஜனைகள் முழக்கம் மிக
பலமிகு தொனிகளின் பக்தர்கள் பழக்கம்
சனிவாரம் தவிராத வழக்கம் அதை
சார்ந்தாலே நம்பாவ மோடுமே கலக்கம் (பெரு)

50 மிட்டாய் கடைகளின் ஜோக்கு பார்
மினுக்கென ஒளிக்குதே குளோப்புகள் போக்கு
வளமிகு பாத்திர மினுக்கு மிக
வாங்கிடு மாதர்கள் காதினில் குனுக்கு (பெரு)

51 பாரடிச் சத்திரம் நேராய் நாம்
பார்த்துக் களித்திட பண்பாக வாராய்
ரெட்டிமார் கட்டியது சீராய் இது
நேர்மையாய் விளங்குவது நீசுற்றிப் பாராய் (பெரு)

52 பிரசன்ன வேங்கடவன் பாரு பலர்
பின்சூழ குதிரையூரும் தம்பதிகள் சீரு
மலைசுற்றி வருகின்ற நேரு காக்ஷி
மாலைதநீ பார்த்தூன் மனங் களிகூரு (பெரு)

53 கோஷ்டிகள் கோவிந்த சத்தம் இங்கு
கோடிக் கணக்கான பக்தர்களின் சித்தம்
பார்த்து அனுதினம் நித்தம் வெகு
பரமானந்த மடைவார் திடமான சித்தம் (பெரு)

54 மயிலேல மனநிலை நிறுத்து அந்த
மங்கையர்க் கண்ணனை நாம்கை குவித்து
சிறப்புடன் வணங்கிச் சேவித்து நாம்
சிறுநடை யாகவே அடிபணி வித்து (பெரு)

55 அம்மனடி பாதமாம் மயிலேல நாம்
அண்டினுல் பாவம் தொலைக்கலாம் குயிலே
கோவிந்த சத்தமாய்க் குரலே நாம்
குறித்திட்ட மோக்ஷம் மரித்திட மயிலே (பெரு)

56 மாலை ஜொலிக்குது பாராய் மாயன்
மார்பினில் தாவடம் ஒளிக்குது சீராய்
பட்டுப் பீதாம்பரம் பாராய் ஐயன்
பாதத்தில் சதங்கை ஒளிமிகு கூறுய் (பெரு)

57 மூன்று மைல்மலை சுத்து ஐயன்
முடுகி யோடிவந்த குதிரையின் சித்து
விடியவோ நாழிகை பத்து ஐயன்
விரைவாக மலையேறும் விந்தைதநீ நத்து (பெரு)

58 மலைமத்தி மண்டபம் பாரு இரு
மண்டப வனப்பைநான் என்சொல்வேன் சீரு
கண்ணே கருங்கற்படி நேரு நீ
கருதியே சடுதிவா படிமீதி லேறு (பெரு)

59 தோகையே ஆலயத்தின் விந்தை சொல்ல
தோன்ருமலே எந்தன் மனமிகு சிந்தை
ஆவி மயங்குதே முந்தை நாளில்
ஆடவபக்தர்கள் கூடிச்செய் விந்தை (பெரு)

60 கிழேபார் மண்டப ஜோரு மேலே
கின்னரர் போற்றிடு மதில்களின் சீரு
ஆலயப் பணிசெய்த பேரு இனி
அவனியில் வேறு வருவது யாரு (பெரு)

61 கோவிலின் உள்ளேவா குயிலே அந்த
கோலம் நிறைந்திட்ட குன்றதின் ஒயிலே
சீலமுடன் பார்ப்பாய் மயிலே இந்த
சீரான ஆலயக் காக்ஷியைக் குயிலே (பெரு)

62 பொங்கு மடப்பள்ளி பாராய் மலே
பூமிக்குள் மண்டபம் துலங்குதே சீராய்
தங்கிடும் தூண்களை நேராய் அதில்
தரித்திட்ட சிற்பியின் வல்லமை பாராய் (பெரு)

63 வருவாயடி இள மானே இங்கு
வளமான இலந்தையடி கறுப்பண்ணக் கோனே
மேட்டிமை யான பூமானே நிதம்
மேன்மை யாகமனந் தனில்நினை தானே (பெரு)

64 ஆதி இலந்தையடி ஐயன் அவன்
அனைவோர்க்குந் திடமதா யருள்செய்யு மையன்
கூர்ராய்க் கொடுத்திட்ட மெய்யன் அவன்
கூர்வடி பணியடி திருவடி துய்யன் (பெரு)

65 அடைவாக கற்பூரங் கொண்டு நம்
ஐயன் பாதங்களை அர்ச்சித்துக் கொண்டு
அடைவோம் துறையூரைக் கண்டு இனி
அடுத்தநாள் ரதசேவை களிப்புடன் கொண்டு (பெரு)

66 வேங்கட கோவிந்த ஐயா நின்னடி
விரும்பிப் பணிந்திட்டோம் காத்தருள் மெய்யா
பூங் கொடிபோல் காக்குந் துய்யா சிறு
பூரணன் நின்னடி போற்றினு னையா. (பெரு)

இரதோற்சவக்காக்ஷி.

பொன்னுலவு சென்னிகுள என்ற காவடிச்சிந்து மெட்டு.

இந்துஸ்தான்—காப்பி—தாளம்—சாப்பு.

1 தீர்த்தபுரி யாந்துறைசை ஸ்ரீனிவாசன் தேரேறிய
தீரத்தின் வளமைமிக சொல்வேனே —அந்த
தேரதின் மகிமையென் சொல்வேனே —அடி
சொர்னமே மயிலன்னமே நடைபின்னமேதுதி பண்ணுவோமடி
சோர்ந்திடா தவனடியே சென்றிடு —அவன்
ஜோதியிலுன் மனந்தனையே கொண்டிடு (தீர்த்த)

2 கெண்டைவிழி மாதரசே ஜண்டாக்கொடி நாட்டியதோர்
கெடிதேர் வடிவதையே பாரடி —மின்னல்
கொடிபோன்ற கும்பமதை பாரடி —திரு
கேசவன்றிரு வேங்கடேசன் பாசமாக வாசமேசெய்
கிரிவிசேடம் மிகுந்தவளம் சீரடி —அதில்
பிரிகின்ற சிகரங்களும் கூறடி (தீர்த்த)

3 தேரசைய சன்னைகளும் பாரசைய போடுகின்ற
தீவிரத்தை நீபாரடி தோகையே —மேலே
தாளம்மேளம் ஓசைமிகு சேவையே, —இரு
தேவிமாருடன் மேவியேயமர் வேங்கடேசனின் சேவையேநீ
தெரிசித்தால் நற்கதி பாவையே —இனி
திரும்பிப்பார் ஜனக்கூட்டம் தோகையே (தீர்த்த)

4 அசைகின்ற தேரழகும் ஆலவட்டந் தன்னழகும்
அன்னமேநீ பார்த்துகளி கூர்ந்திடு —நீல
வண்ணனையே உன்மனதில் தேர்ந்திடு —நம
தன்பன்பூரண னின்பமாகவே தென்புடன்துதி நம்பியேசொலும்
சிந்துசொல்லி சந்தோஷமாய்ப் பார்த்திடு—ஐயன்
சேவையே மனந்தனில் சேவித்திடு (தீர்த்த)

ஸ்ரீராமச்சந்திரனே என்ற வர்ணமெட்டு.

1 தோரா வடிவழகி தேரழகைப் பாரடிநீ
பாரோ ரிழுப்பதைநீ பார் பார் பார் —எந்தன்
பாவையே யருங் கோவையே. (தோ)

2 ஆதிமூல மென்றபெரும் ஆனைதனைக் காத்ததிரு
ஐயனது சேவையைநீ செய் செய் செய் —இரதம்
பாரடி மனந் தேரடி. (தோ)

3 வேணுநாதன் தம்பியடி வேங்கடவன் பேரடியே
விரும்பிரத மேறியசீர் பார் பார் பார் —வெகு
நீதமே யரும் விநோதமே.

4 பெருமாள் மலைதனில்வாழ் திருமாவின் சேவைசெய்தால்
அருமோக்ஷ முண்டென்பதை கேள் கேள் கேள்—அடி
அன்னமே பசும் சொன்னமே. (தோ)

4 அண்டம் நடுங்கச்செய்த கொண்ட விராவணனை
துண்டமாகச் செய்தவனைப் பார் பார் பார் —திரு
ராமனே பரந் தாமனே.

6 காட்டில் துருவனுக்கு காட்டி இடங்கொடுத்த
கண்ணன்மால் வேங்கடனைப் பார் பார் பார்—நீ
கருதியே படி சுருதியே. (தோ)

7 பாலன் பிரகலாதன் சீலமுடன் வேண்டிநிற்க
கோலமுடன் தூணில்வந்தான் கேள் கேள் கேள்—பெரும்
சிம்மமே நர சிம்மமே. (தோ)

8 தாசாதி தாசராம தாசனையே காப்பதற்கு
மாசப் பகுதியீந்த மால் மால் மால்—மதி
மருவடி யவன் திருவடி. (தோ)

9 திருப்பதி தனைக்கடந்து திருப்பெருந் துறைசைவந்து
திருப்பெருமாள் மலையமர்ந்தோன் தேர் தேர் தேர்—என்ன
சீரடி சுற்றிப் பாரடி. (தோ)

10 தேவியலர் மேல்மங்கையின் ஆவிக் கிசைந்தவண்டி
மேவியசீர் வேங்கடவன் தாள் தாள் தாள்—நாளும்
நினையடி அடி பணியடி. (தோ)

11 சந்ததமும் சிந்தைதனில் அந்தமிலா வேங்கடனின்
சொந்தமாம் பூரணன்துதி சொல் சொல் சொல்—நாம்
சொல்லுவோம் இனி செல்லுவோம். (தோ)

வாகதேவனே என்ற வர்ணமெட்டு.

1 தாஸர் பூமானே தர்க்காரு மெந்தனை
நேச முடனே நினைந்தே னுந்தனை (தாஸர்)

2 ஆசை மூன்றினுல் அவனியில் நானே
பாச வலைதனில் பதிந்தே னையனே (தாஸர்)

3 பெருமாள் மலைதனில்வாழ் ப்ரசன்ன மாகவே
திருமாலாய் வந்த தேவா போற்றினேன் (தாஸர்)

4 பிரமோதூத வாண்டில்　　பெரும்வை காசியில்
திருரத மேறும்　　தேவனே காரும்　(தாஸர்)

5 பூவுலகு தனில்　　மேவும் வேங்கடனே
பூரண தாஸன்　　போற்றினே னானே

வெள்ளிமலை யொத்தபல மேடை என்ற வர்ணமெட்டு.

இராகம்—காப்பி—தாளம்—ஆதி.

1 பக்தருக்கு முக்திதரு சீலன்—திரு
பாவலர்க்கு வித்தையனு கூலன்　　இந்த
　பாரறிய தேரிலேறு கூர்புகழ்மால் சீர்வளத்தை
　　நானே　சொல்லு　வேனே.　(பக்தர்)

2 தேரின்முடி பாரடிப்பொன் கலசம்—மிகு
சீரடி மனதில்விடு கிலேசம்　　இநத
　செந்தமிழால் இந்தவிதம சொந்தமாக சந்தமது
　　பாடி　விளை　யாடி.　(பக்தர்)

3 பக்தர்கள்சேர் வித்வஜனக் கூட்டம்—ஹரி
பஜனைபுரி தொண்டர்கள் கொண்டாட்டம்　　இந்த
　பாரிலுள்ள பக்தர்களும் சேரவந்து சிந்தைதனில்
　　செய்வார்　சேவை　கெய்வார்.　(பக்தர்)

4 கோவிந்த ராமாவென்ற சத்தம்—மெத்த
கூக்குரா விடும்பக்தர் சித்தம்　　நீ
　கோவிந்தா கோவிந்தாவெனக் கூவிக்கூவி மேவித்துதி
　　செய்வாய்　சிந்தை　செய்வாய்.　(பக்தர்)

5 மலைசுற்றி வந்ததிந்த தேரு—நின்
மனந்தனில் சஞ்சலமே தீரு　　திரு
　மரர்பிலணி ஸ்ரீதரனை பூரணம் பணியுமருள்
　　சொன்னான்　கவி　சொன்னான்.　(பக்தர்)

இசைந்தசூலம் ஏன்ற இருப்புகழ் மெட்டு.

1 அகன்ற மார்பும் திரண்ட புயமும்　　அழகாக
அமைந்த தாவடம் திருமுடி ஒளிமிகு　　தகுகிரீடம்

2 இசைந்த மாதர் இருபுற மமர　　எழிலாக
இாதந்தனி லமர்ந்து எங்களைக் காக்கு　　மிளையோனே

3 உகந்த வசுரர் கிளையுடன் வேரற　　செய்தோனே
உகந்த பாசக் கடல்தனைக் கடக்க　　துதித்தேனே

4 தண்டமிழ் நாடதில் தகுந்தநற் றுறைசை　　கிரிமேவும்
தாஸன் பூரணன் சேயன் றுதித்திடும்　　பெருமாளே.

முற்றுப்பெற்றது.

அறிவிப்பு.

இதன் அடுத்த பதிப்பு சீக்கிரத்தில் வெளியிடப்படும்.

இப்புத்தகம் வேண்டுவோர் பதிப்பாளரிடமும் அடியிற் கண்ட இடங்களிலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

1. நித்தியானந்த அச்சுக்கூடம்,

பெரிய கடைவீதி, துறையூர்.

2. G. கோவிந்தராஜுலு செட்டியார்,

மளிகை & ஷாப் துறையூர்.

4. M. வெங்கடசுப்பு செட்டியார்,

மளிகை & ஷாப், துறையூர்.

4. B. கோவிந்த ரூவ்,

புக் ஷாப், பெரிய கடைவீதி, துறையூர்.

5. T. R. நடராஜ அய்யர்,

ஷண்முக விலாஸ் காபி கிளப், துறையூர்.

6. T. K. PILLAI,

சாப்பாட்டு கிளப் சாலைத்தெரு, துறையூர்.